வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அரசு கடன்.

* 445 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாபேட்டை நகராட்சியின் நிதி பற்றாக்குறையைப் போக்கச் சென்ற ஆண்டு எவ்வளவு கடன் அரசால் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டு, அதாவது 1970–71 வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அதன் நிதி பற்றாக்குறையைப் போக்க அரசு ரூ. 15,000 கடனை வழங்கியது.

Demands day organised by Gramasevaks.

* 446. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the "Demands Day" organised by the Gramasevaks about February, 1971: and

(b) if so, the action taken on the demands?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஊர்நல உதவியாளர்கள் (Gramasevaks) சம்பள வீதத்தை மீண்டும் மாற்றியமைப்பதற்கு, தமிழ்நாடு ஊர்நல உதவியாளர்கள் சங்க கோரிக்கைகளை அரசு பரிசீலித்துள்ளது. இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரைத்த சம்பள வீதங்களே போதுமானவை என்றும், மாற்றம் எதுவும் தேவையில்லை என்றும் அரசு கருதுகிறது.

சென்னை—அரக்கோணம் புறநகர்ப் பகுதி

* 447 வினா—திரு. என். எஸ். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் அரக்கோணம் வரை உள்ள பகுதியை சப்-அர்பன் பகுதியாகச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னை மாநகர பெரும் திட்டத்தின் பொருட்டு அரக்கோணத்தை சென்னை தலைநகருக்குரிய (மெட்ரோபாலிடன்) பரப்பில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி இருக்குமானால் அதற்கு விடை அரக்கோணம் நகர அமைப்பு இயக்குநரால் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தின் பொருட்டு வரையப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளது. அம்மாதிரி சென்னை தலைநகருக்காக வரையறுக்கப்பட்ட பகுதி 456 சதுர மைல் பரப்பை சென்னை—செங்கை